**அனுப்புநர்**

திரு.சா.சேதுராம வர்மா,
அரசுத் தேர்வுகள் இயக்குநர்,
சென்னை – 600 006.

**பெறுநர்**

செய்தி ஆசிரியர்,
அனைத்து செய்தி ஊடகங்கள்.

**ந.க.எண். 020958 / பி1 / 2021** **நாள் : 12.11.2021**

**ஐயா/அம்மையீர்,**

**பொருள் : 2021–2022-ம் கல்வி ஆண்டு 2022 பத்தாம் வகுப்பு பொதுத்தேர்வு – தனித்தேர்வர்கள் அறிவியல் பாட செய்முறை பயிற்சி வகுப்புகளில் சேர்த்தல் குறித்த – செய்திக்குறிப்பு வெளியிடுதல் – சார்ந்து.**

-----

2021-2022-ஆம் கல்வி ஆண்டு, **2022**-ல் நடைபெறவுள்ள பத்தாம் வகுப்பு பொதுத்தேர்வுக்கு விண்ணப்பிக்கவுள்ள அனைத்து வகை தனித்தேர்வர்களும் அறிவியல் பாட செய்முறைப் பயிற்சி வகுப்பில் பெயர்களைப் பதிவு செய்து கொள்வது குறித்த **“செய்திக்குறிப்பு”** இத்துடன் இணைத்தனுப்பப்படுகிறது. இச்செய்திக்குறிப்பினை இணைப்பில் உள்ளவாரே அனைத்து தனித்தேர்வர்களும் மற்றும் பொது மக்களும் அறிந்து கொள்ளும் வகையில் தங்களது நாளேடுகள், வானொலி மற்றும் தொலைக்காட்சியில் செய்தியாக வெளியிடவும் மற்றும் ஒலி/ஒளி பரப்பிடவும் கனிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

**“இது விளம்பரம் அல்ல”** எனவும் தெரிவித்துக் கொள்கிறேன்.

**ஒம்/–**
**இயக்குநர்**

**இணைப்பு :** செய்திக் குறிப்பு
**நகல்:**

1. அனைத்து மாவட்டக் கல்வி அலுவலர்கள் – **18.11.2021 முதல் 03.12.2021 வரை** அறிவியல் செய்முறை பயிற்சி வகுப்பில் தனித்தேர்வர்களின் பெயர்களை சேர்க்கத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொண்டு, தயார் நிலையிலிருக்குமாறு தலைமையாசிரியர்களுக்கு அறிவுறுத்திட மாவட்டக் கல்வி அலுவலர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.
2. அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்கள் – தகவலுக்காகவும், உரிய நடவடிக்கைக்காகவும்
3. அனைத்து அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர்கள் – இத்துடன் இணைக்கப்பட்டுள்ள அறிவிக்கையை உள்ளூர் பத்திரிக்கைகள், ஊடகங்களில் தொடர்ந்து செய்தியாக வெளியிடவும் மற்றும் வானொலி / தொலைக்காட்சிகளில், ஒலி / ஒளிபரப்பிடவும் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள அறிவுறுத்தப்படுகிறது.

**அரசுத் தேர்வுகள் இயக்ககம், சென்னை– 600 006**

**2021–2022 ஆம் கல்வி ஆண்டு, 2022 பத்தாம் வகுப்பு பொதுத் தேர்வுக்கு அறிவியல் பாட செய்முறை பயிற்சிக்கு பதிவு செய்வது தொடர்பான**

## செய்திக் குறிப்பு

2021–2022 ஆம் கல்வி ஆண்டிற்கான பத்தாம் வகுப்பு பொதுத் தேர்விற்கு விண்ணப்பிக்கவுள்ள நேரடித் தனித் தேர்வர்களும் (முதன் முறையாக அனைத்துப் பாடங்களையும் தேர்வு எழுத இருப்பவர்கள்) ஏற்கனவே 2012க்கு முன்னர் பழைய பாடத்திட்டத்தில் தேர்வெழுதி அறிவியல் பாடத்தில் தோல்வியுற்றவர்களும், அறிவியல் பாட செய்முறைப் பயிற்சி வகுப்பில் சேர பெயர்களை பதிவு செய்துக் கொள்ள தெரிவிக்கப்படுகிறது.

**அனைத்து தனித் தேர்வர்களும் 18.11.2021 (வியாழக்கிழமை) முதல் 03.12..2021 (வெள்ளிக்கிழமை) –க்குள் சம்பந்தப்பட்ட மாவட்டக் கல்வி அலுவலர் அலுவலகங்களில் தங்களின் பெயரை பதிவு செய்து கொள்ள வேண்டும்.** மாவட்டக் கல்வி அலுவலரால் ஒதுக்கீடு செய்யப்பட்ட பள்ளிகளுக்குச் சென்று செய்முறைப் பயிற்சி வகுப்புகளில் கலந்து கொள்ள வேண்டும். பயிற்சி வகுப்புகளுக்கு 80% வருகை தந்த தனித்தேர்வர்கள் மட்டுமே 2021–2022 ஆம் கல்வி ஆண்டில் 2022 பத்தாம் வகுப்பு பொதுத் தேர்விற்கு விண்ணப்பிக்க அனுமதிக்கப்படுவர். செய்முறைப் பயிற்சி பெற்ற தேர்வர்கள் அந்தந்த மாவட்டக் கல்வி அலுவலரை தொடர்பு கொண்டு செய்முறைத் தேர்வு நடத்தப்படும் நாட்கள் மற்றும் மைய விவரம் அறிந்து செய்முறைத் தேர்வினை தவறாமல் எழுதிட வேண்டும்.

மேலும் கூடுதல் விவரங்களுக்கு சம்பந்தப்பட்ட மாவட்டக் கல்வி அலுவலர் அலுவலகங்களைத் தொடர்பு கொள்ளுமாறு தேர்வர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். இதற்கான விண்ணப்பப் படிவத்தினை **www.dge.tn.gov.in** என்ற இணையதளத்தில் **18.11.2021** முதல் **03.12.2021** வரை பதிவிறக்கம் செய்து, விவரங்களை பூர்த்தி செய்து இரண்டு நகல் எடுத்து சம்பந்தப்பட்ட மாவட்டக் கல்வி அலுவலர் அவர்களிடம் தனித்தேர்வர்கள் **03.12.2021** க்குள் நேரில் ஒப்படைத்தல் வேண்டும்.

ஒம்/–
இயக்குநர்

சென்னை – 6
நாள் : 12.11.2021.